**மே – 1**

**"மனுஷ குமாரனும், ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்ய வந்தார்."**

**- மத் 20 : 28**

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய பிரதிஷ்டை கர்த்தருக்காக இருக்குமானால், நமது நிமித்தமாகவும், புருஷன், அல்லது பிள்ளைகள் தகப்பன் அல்லது தாயார், பிறர் அல்லது சிநேகிதர், கிறிஸ்துவுக்குள் சகோதரர்கள் ஆகிய இவர்கள் நிமித்தமாகவும், நாம் செய்கிற நமது நியாயமான உரிமைகளின் ஒவ்வொரு தியாகமும், அக்கறைகளின் ஒவ்வொரு தியாகமும், கர்த்தருக்குச் செய்யப்படுகிறதாக அவரால் எண்ணப்படுகிறது. அப்படி இருக்கையில், அதே சேவைகள் வேறு ஒரு நோக்குடன் செய்யப்பட்டால், அதாவது யாராவது ஒரு நீதிமானாக்கப்படாத, கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்யாத ஒருவரால் செய்யப்பட்டால், அல்லது கர்த்தருக்கு ஒரு தியாகமாக அல்லாமல், தனிப்பட்டவர்களுக்கு சும்மா செய்திருந்தால், இந்த காரியங்கள் அவரை பின்பற்றுகிறவர்களாகிய நம்முடைய தியாகங்களாக எண்ணப்படமாட்டாது

**- Z ’03 , 407 (R 3265)**

ஆதாமின் சிரேஷ்டமான வம்சத்தானான மனுஷக்குமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்ய வரவேண்டியிருந்தது என்பது எவ்வளவு மேன்மையாகவும், தகுதியானதாகவும் இருக்கிறது. இதில் மனிதனாகிய ஆதாமைவிட மனுஷக்குமாரன் எவ்வளவு மிகவும் அதிகமாய் சிறந்தவராயிருக்கிறார். இவ்விஷயத்தில் ஆதாம் தனக்கென்று சேவைசெய்து, மனுகுலத்தின் நம்பிக்கையை நாசம் செய்தான். அப்படியிருக்கையில், மற்றவர்களுக்கு சேவை செய்து யேசு முழு மனுக்குலத்துக்கும் இரட்சிப்பை உண்டுபண்ணினார். தன்னலத்தை விட தன்னலமற்றிருத்தல் சிறந்ததாக இருக்கிறது போல, முதல் ஆதாமைவிட யேசு சிறந்தவராக இருந்தார். அவர் நமக்கு மாதிரியாகவும் இருக்கிறார். அவரை பின்பற்றுவது இராஜ்ஜியத்துக்குத் தகுதியுள்ளவர்களாக்கும். **- P’ 30, 77.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

2கொரி 8:9; மத் 1:21; 4:23; 5:17; 9:13; 15:24; 18:11-14; 20:25-27; மாற் 1:38; லூக் 1:78; 4:18; 22:27; யோவா 4:34; 10:10; 13:4-17; 18:37; அப் 10:38; கலா 5:13; எபி 2:9,14,15,18.

**கோபுர வாசிப்பு : Z ’14, 6(R 5375).**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் இந்த வசனம் எனக்கு என்ன அர்த்தமுள்ளதாயிருந்தது? நான் அதை எப்படி உபயோகித்தேன்? ஏன்? அதன் பலன் என்ன?